

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்
மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

# பரராஜசேகரம் சிவநாதன்

# நினைவு மலர்

15.02.2024

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்
மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# பரராஜசேகரம் சிவநாதன்

அவர்களின்

# நினைவு மலர்

15.02.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம் இனிய இதயத் தந்தையே
எமது தெய்வமும் நீதான்
எம் அன்பு வழிகாட்டியும் நீயே
ஒளியேற்றிய ஒளிச்சுடரே
பேணிக்காத்து வளர்த்து
ஆளாக்கிய சுமை தாங்கியே
அன்பே
உன் புன்சிரிப்பு முகம்
காண்பது இனி எப்போது அப்பா
திருப்பாதம்
அதில் எங்கள் கண்ணீர் காணிக்கை.
"சமர்ப்பணம் அப்பா"

இல்லம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
28-10-1950

மறைவு
16-01-2024

# அமரர்
# பரராஜசேகரம் சிவநாதன்

## திதி வெண்பா

ஆண்டு சோபகிருது வருடம் தை பதினாறாம் திகதி
பூர்வபட்ச சஷ்டி திதியில் நீண்ட புகழ் சிவநாதன்
விண்ணகத்தே விரைந்திட்டார் விளம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்





# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத் தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய்.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வு சூழ்கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயை
தொண்டனேன் விளம்புமாவிளம்பே!

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே!

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்

# பரராஜசேகரம் சிவநாதன் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு


ஈழவள நாட்டின் வடபாகத்தின் யாழ்மாவட்ட பகுதியில் சிவன், பிள்ளையார் மற்றும் அம்மன் ஆகிய ஆலயங்களும் நெல்விளையும் வயல்சூழ் கடல்வளம் சூழவுள்ள இடமும் கனி தரு சோலை நிறைந்த தென்னங் கீற்றுடன் தெய்வத்திருவருள் பெற்று நற்றோர் வாழும் புண்ணிய பூமியாகிய சாவகச்சேரியில் தாமோதரம் பிள்ளை வீதியில் சித்தரா பரராஜசேகரம் தம்பதியினரின் மூத்த புதல்வராக 28-10-1950ம் ஆண்டு சிவநாதன் அவதரித்தார் இவர் ஜீவசோதி (ஜீவா), காலம் சென்ற ஸ்ரீகாந்தன் (பாபு கனடா), சாந்தி (கனடா), ஜெயந்தி (சுவிஸ்), இராஜேந்தி (கனடா), ஸ்ரீதரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். திருமதி பர்வதிப்பிள்ளை பரராஜசேகரம், தில்லையம்மா பொன்னம்பலம் ஆகியோரின் பெறாமகனும் சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம் (முன்னாள் சயர்மன்) சுப்பிரமணியம் சின்னத்தம்பி (வட்டக்கச்சி), சரஸ்வதி சின்னத்தம்பி (Techer) ராமலிங்கம் தாபேத்திரன் (Cornel) தங்கமண்யம் (டென்மார்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். விசுவலிங்கம் நல்லம்மா அவர்களின் அன்பு மருமகனும் மதுரேஸ்வரன், அருனகிரிநாதன், காலம்சென்ற ஞானச்சந்திரன், கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துணரும் ஆவார். இவர் தனது இளவயதை தாய் தந்தையாருடன் நாவற்குழியை வசிப்பிடமாக கொண்டு வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் சிறுவயதில்



அமரர் சிவநாதன் மனைவியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இளமைக் கல்வியை நாவற்குழி மகாவித்தி யாலயத்திலும் முத்துத்தம்பி வித்தியாலயத்திலும், திண்ணை வேளையிலும் தனது கா.பொ.தர சாதாரண தரம், மற்றும் கா.பொ.தர உயர்தரத்தை நாவற்குழி மகா வித்தியாலத்திலும் பின்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் முறையே பயின்று பூர்த்தி செய்தார். இவர் கல்வி கற்ற பாடசாலைகளில் கல்வித்துறை மற்றும் விளையாட்டுத் துறையிலும் திறம்பட விளங்கியதோடு அதிபர், ஆசிரியர், சக மாணவர்கள் மற்றும் ஊர் மக்களிடத்தே நன்மதிப்பும் பெற்றிருந்தார். இவர் பெற்ற நன்மதிப்பு பின்னர் இவரை பொதுச்சேவைத் துறையில் சிறந்து விளங்க வழிவகுத்துக் கொண்டது.

கம்பீர உருவமும், சாந்தமான முக பாவமும் கொண்ட இவர் அனைவரிடத்திலும் சிறு வயது முதலே அன்பாகவும் பண்பாகவும் பழகும் சுபாவம் கொண்டவர். இவர் சிறுவயது முதலே பாட்டுப் பாடுவதிலும் ஆடல்களிலும் அதிக அற்றல் கொண்டவர். குறிப்பாக 60 களில் வெளியான சினிமா படம் மற்றும் பாடல்களிம் அதிக நாட்டம் கொண்ட இவர் அவரைச் சுற்றி இருப்போர் களுடன் பாடல்கள் பாடி அவர்கள் மகிழ்வதையும் நகைப்புறு வதையும் பார்த்து மகிழும் குணம் கொண்டவர் இவ்வகை பண்புகள் இவரை காலப்போக்கில் அனைவரும் கவரும் சமூக சேவகனாகத் திகழ வழிவகுத்துக் கெண்டது.

இவர் தனது **23**வது வயதில் (**1973**) பிரதிப்புகையிரத நிலைய அதிபராக தச்சந்தோப்பில் அரச கடமையை பொறுப்பேற்று திறம்பட சேவையாற்றி வந்ததன் பின்னர் இவர் **28**வது வயதில் (**1978**ம் ஆண்டு) பதவி உயர்வு பெற்று உப புகையிரத அதிபராக (Substation master)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தானை புகையிரத நிலையத்தில் தம்பிப்பிள்ளை அருமைநாயகம் அவர்களின் வழிகாட்டுதல்களுக்கமைய நேர்த்தியாகவும் திறமையாகவும் அவரது பொதுச் சேவையை செய்து வந்தார். இவரது கடின உழைப்பும் மகத்தான பொதுச் சேவையும் இவர் மீண்டும் புகையிரத நிலைய அதிபராக 1981ம் ஆண்டு பதவி உயர்வு பெற வழிவகுத்தது. இவரது சேவை காலத்தில் ஊர் மக்களின் அன்பையும் மதிப்பையும் உயர்த்திக் கொண்டிருந்தார் என்றால் மிகை ஆகாது.


அவர் தனது இல் வாழ்க்கையை மீசாலையைச் சேர்ந்த காலம்சென்ற விசுவலிங்கம் நல்லம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வி உதயமலரை (சாந்தம்) 1982ம் ஆண்டு ஐப்பசி 1ம் நாள் திருமணம் செய்து, மீசாலையை தனது நிரந்தர வதிவிடமாக்கிக் கொண்டார். இவர் முறையே சிவகுணாளன், சிவபரதன், இந்துஷா, பத்மசிவம் மற்றும் டிலுக்சிகா ஆகிய பிள்ளைகளை பெற்று இன்புற்றார்.

இவர் தனது இக்கட்டான கால கட்டத்திலும் தனது பிள்ளைகளையும் அன்பு மனைவியையும் கண்ணும் கருத்துமாக வளர்த்து, திறம்பட வழிகாட்டி நீதி, நேர்மை, துணிவு, பாசம் மற்றும் பிறர் பொருள் நாடாமை போன்ற நற்குணங்களை ஊட்டி வளர்த்தார்.


தனது குடும்பம் மட்டுமல்லாது தனது மாமன் மற்றும் மாமியான விசுவலிங்கம் நல்லம்மா அவர்களை தனது தாய் தந்தைக்கு நிகராக அரவணைத்து தனது மைத்துனர்களான மதுரேஸ்வரன், அருணகிரிநாதன், மற்றும் கணேசலிங்கம் அவர்களுக்கு தகுந்த காலத்தில் திருமணம் செய்து வைத்து இன்புற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா சென்றிருந்த வேளையில்




UK சென்றிருந்த வேளையில்



உறவினர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் *1998* ஆண்டு Releave station Master (R,Sm) ஆக பதவி உயர்வு பெற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் அதிபரானார். தனது அரச சேவையின் நிமித்தம் இல 75, ஸ்ரீ பன்னானந்த மாவத்தை கொழும்பு 15 ஐ தனது குடும்பம் சகிதம் வதிவிடமாக்கிக் கொண்டிருந்தார்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளில் உற்றார் உறவினர் ஊர் மக்கள் மத்தியில் வைத்திருந்த அன்பின் நிமித்தம் எண்ணற்றவர்களுக்கு தன்னான உதவிகளை தலைநகர் கொழும்பிலிருந்து செய்ய என்றும் பின்னிற்ற தில்லை வீடு தேடி வருபவர்களுக்கு உபசரிப்பதிலும் அவர்களின் தன்னாலான சேவைகளை பூர்த்தி செய்து தருவதிலும் இன்புற்றார்.

*1997 - 1999*ம் ஆண்டு கால கட்டங்களில் லுணுவில புகையிரத நிலையத்திற்கு பிரத புகையிரத நிலைய அதிபராக மாற்றம் பெற்று சகோதார மொழி மக்களுக்கும் தனது சேவையை புரிந்து அம்மக்களின் மனதை வென்று இன்புற்றார்.

இவர் *2011*ம் ஆண்டு சிரேஷ்ட புகையிரத நிலைய அதிபராக (Class II S.M) கொழும்பு கோட்டையில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டு மீசாலை வடக்கை மீண்டும் தனது குடும்பம் சகிதம் வதிவிடமாக்கிக் கொண்டார். இவர் இயற்கையிடத்தும் தன்னை சூளவுள்ள மீசாலையூர் மற்றும் மக்களிடத்து அளவற்ற அக்கறையும் பற்றும் கொண்டிருந்தார். இவரது சேவை மனப்பாங்கு இவர் ஓய்வுபெற்றும் சிறிதும் குறைவடையவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்லாது நாவற்குழி புகையிரத நிலைய பற்றாக்குறை இடைவெளியை பூர்த்தி செய்ய புகையிரத நிலைய அதிபராக ஓய்வுபெற்ற பின்பும் 6 மாத காலம் சேவை புரிந்தார். இவர் மீசாலை நடராச வீரகத்தி விநாயகர் ஆலய தர்ம கர்த்த சபை செயலாளராகவும், சுடர் ஒளி சனசமூக நிலைய உபதலைவராகவும் மற்றும் போசகரா கவும், மீசாலை வடக்கு சிவில் பாதுகாப்பு ஆலோசகராக வும் சேவை புரிந்தார்.

பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளின் மிகுந்த அக்கறை காரணமாக இவர்களது இரு புதல்வர்களை மேல் பட்டபடிப்பிற்காக பிரித்தானியாவிற்கு (UK) தருவித்து அவர்களின் கல்வி திறமைகளை கண்டு பின்னர் பட்டளிப்பு விழாக்களில் (UK) கலந்து கொண்டு பெருமை கொண்டார்.

இவர் தனது புதல்வர்களின் தொழில் முன்னேற்றங் களை கண்டு கேட்டும் அளவற்ற இன்பமும் பெருமையும் கொண்டிருந்தார். குறிப்பாக தனது புதல்வர்கள் முறையே சிரேஷ்ட பல்கலைக்கழக விரிவுரையாளரானதை இட்டு (Electrical & Electronic Engineering faculty, U.S.W, UK), கட்டுமான துறை முகாமையாளர் (Construction Project Manager), மற்றும் Network Manager (University of Jaffna) போன்ற துறைகளில் முறையான தொழில் துறை முன்னேற்ற மடைவதை இட்டு பெரும்மகிழ்வும், கர்வமும் கொண்டிருந்தார்.

இவரின் புதல்வர்கள் மட்டுமல்லாது அவரது புதல்விகளையும் உயர்கல்வித் துறைகளான கணக்கியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகையிரத நிலையம் ஊழியர்களுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Accounting), மற்றும் மென்பொருளியல் (HND) துறைகளில் கற்பித்து இன்புற்றார்.

அவர் தனது மூத்த புதல்வர்கள் மற்றும் புதல்விக்கு உரிய நேரத்தில் திருமணங்களை நடாத்தி நந்தகுமார் (Canada), நிலானி (UK), தர்சி (UK) ஆகியோரை அன்பு மருக்களாகவும் ஜென்சி, அக்ஷிவின், அல்வின் மற்றும் தஸ்வின் அகியோரை பேரப்பிள்ளைகளாகவும் பெற்று அவர்களுடன் அளவளாவி அளவற்று அகமகிழ்ந் திருந்தார்.

இவர் 2021ம் ஆண்டு தனது மகள், மருமகள், பேரக்குழந்தைகள் மற்றும் உறவினர்களை காண கனடா சென்று அவர்களுடன் அளவலாவி இன்புற்றார்.

கர்த்திகை மாதம் 2023ம் ஆண்டு உடல் சுகயீனம் காரணமாக சிகிச்சை பெற்று வந்த இவர் 15ம் நாள் தை மாதம் 2024ம் ஆண்டு சாவகச்சேரி பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு 16ம் நாள் தை மாதம் 2024ம் ஆண்டு சிகிச்சை பலனின்றி நிரந்தரமாக உறங்கிக் கொண்டார்.

73 வருடங்கள் இவ்வுலகில் அவதரித்தும் 42 வருடம் தனது இல்வாழ்க்கையை செவ்வனே சிறப்புடன் மனைவி மற்றும் மக்களுக்காக வாழ்ந்தும் 39 வருடம் அரச சேவை புரிந்தும் வெகு தூரம் சென்றிருந்தாலும் அவரது பசுமையான நினைவுகளும், அவர் புரிந்த மக்கள் சேவைகளும் அவர் அன்புத்திருமுகமும் எம் மனதை விட்டு என்றும் அழியாது. அவர் ஆத்மா சாந்தி அடைய நாம் தினமும் எம் கண்ணீர் பூக்களால் அர்சிக்கிறோம்.

தொகுப்பு மகன் குணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்பான உத்தம தெய்வத்திற்கு

என்னை ஒரு போதும் பிரிந்திராத என் அருமை தெய்வமே! உங்கள் கரம் பற்றிய நாளிலிருந்து எனது அன்னையும்மாய் பிதாவுமாய் ஒரு குறைவில்லாது கண்ணும் கருத்துமாக கவர்ந்து பிறந்த வீட்டு பிரிவின் துயர் அறியாது என்னை காத்துக்கொண்டீர்களே.

எனது இன்பத்திலும் துன்பத்திலும் பக்க பலமாக இருந்து என்னை என்றுமே ஆட்கொண்டிருந்தீர்களே.

எமது பிள்ளைகளை எம் ஐந்து முத்துக்கள் என்பீர்களே.

எம் முத்துக்களுக்கு வாழ்வின் அர்த்தம் புகட்டி, பல கதைகள், பாட்டுக்கள் மற்றும் நேர்வழி புகட்டினீர்களே.

எனதருமை உத்தம கணவரே எனது தாய்தந்தையை உங்களது தாயாகவும் தந்தையாகவும் பேணி எனது சகோதரர்களுக்கு தகுந்த சமயம் திருமணம் செய்து வைத்து அழகு பார்த்தீர்களே.


நான் உன்னை என்றும் பிரியேன் என்பீர்களே. நீங்கள் என்னை "இஞ்சேரும்" என்று அழைப்பீர்களே, இவ்வாக்கை நான் இனி எப்போது கேட்பேன்.


நீங்கள் எனதும் எமது பிள்ளைகளினதும் நினைவில் நீங்காது இருக்கும் தெய்வமாகி விட்டீர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் பட்டமளிப்பின் போது







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி நான் உங்களது இனிய நினைவுகளை என்றும் சுமந்திருப்பேன்.

இதயம் உருகும் எமது கண்ணீர் முத்துக்களை உங்கள் பாதார விருந்தத்தில் சமர்ப்பிக்கிறேன்.

உங்கள் உத்தம ஆன்மா சாந்தி அடைய நான் என்றும் இறைவனை பிரார்த்திப்பேன்.

அன்பு மனைவி
சாந்தம் (உதயமலர்)

## எனதருமை "அப்பா" எனும் ஆசானுக்கு

குருவிற்கு குருவாகவும் ஆசானிற்கு ஆசானாகவும் எனது தலைசிறந்த வழிகாட்டியாகவும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகவும் என்றுமே எமது Super Hero ஆகவும் இருந்தீர்களே அப்பா!

சிறு வயது முதல் கொண்டு உங்களது அறிவுரைகளும் முதுமொழிகளும் என்றுமே எமது ஆழ் மனதில் செதுக்கப்பட்டிருக்கும் அப்பா!

உங்களது கண்டிப்பான பாசமும் கம்பீரமான வார்த்தைகளும் என்னை நேர்த்தியானவனாகவும் நேர் வழி கொண்டவனாகவும் ஆக்கியதே அப்பா!

நீங்கள் சொல்லும் இருவாசகம் "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்திருப்பச் செயல்" "மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்" இது திருவள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைத்திருக் கலாம் ஆனால் இதன் உண்மையா உள்அர்த்தம் நீங்கள் உதாரணமாக காண்பித்திருப்பீர்கள் அப்பா!.

எம்மை கல்வியில் மட்டுமல்லாது பண்பிலும் உயர்வடைய வைத்து அழகு பார்ப்பீர்களே அப்பா!

எனது ஒவ்வொரு சிறிய முன்னேற்றத்தையும் உங்களுடன் பகிர்ந்து நீங்கள் பெருமை கொள்வதை கண்டு இன்புறுவேனே அப்பா!

எனது முழு கர்வமும் கம்பீரமும் தைரியமும் நீங்கள் தான் அப்பா!

பிதாவை இழந்த பிள்ளைகள் ஏழை என்பார்களே அப்பா!

அன்புடன் அப்பா என்றழைக்க இனி எமக்கு யாரும் இல்லை "அப்பா"

அப்பா என்ற வார்த்தை இனி என்னில் ஆழப்புதைந்து போகும் அப்பா!

அப்பா என்று நான் வாயாறக் கூப்பிடுவதற்கு ஏங்கப்போகிறேனே அப்பா!

உங்கள் இழப்பை என்னால் என்றுமே ஈடுசெய்ய முடியாது ஆனால் உங்கள் இனிமையான நினைவுகளும் அறிவுரைகளும் என்றும் என்னுடனும் என் குடும்பத்துடனும் அழியாதிருக்கும் அப்பா! அப்பா! அப்பா!

**அன்பு மகன் குணா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தெய்வமான என் அப்பாவுக்கு என் இதய காணிக்கை

இவ்வுலகில் எனக்கு அன்பு முகம் காட்டி கல்விச்செல்வத்தை தந்த " தந்தை மகன்கற்றும் உதவியை" சிறப்பாகச் செய்த என் அன்புத் தெய்வமே! நீதியும் நேர்மை மிக்க வாழ்வின் நற்பலன்கள் செய்து வாழ்வாங்கு வாழ்ந்த பண்புடைய அப்பா! தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற வேதவாக்கினை எனக்கு ஊட்டி வளர்த்த என் ஆருயிர் அப்பவே! எனது ஆசைக்கு வழிகாட்டி என்னை வெளிநாட்டிற்கு அனுப்பிய என் ஆருயிர் அப்பா!

இவ்வுலகில் முதலில் அதிகம் பாசம் காட்டியது நீங்கள் தானப்பா! என்வாழ்வில் ஒவ்வொரு வெற்றியையும் என்நாட்டிலும் முதலில் அதீத சந்தோஷம் படுபவர் நீங்கள் தானே அப்பா! என்னு படிப்பிற்கு ஏற்று வேலை கிடைத்தவுடன் முதலில் சந்தோஷப்பட்டவரும் நீங்கள் தானே அப்பா! வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் தர்மத்தை எவ்வாறு கடைப்பிடிப்பது என்று போதித்தவரும் நீங்கள் தானே அப்பா!

பழைய சினிமா கருத்துடைய பாடல்களை விரும்பிக் கேட்டு, பாடி, மகிழ்ந்து விவரித்தவர் நீங்கள் தானே அப்பா! எனது வாழ்வில் குறை நிறை யாவையும் உங்களிடம் கூறி உள் மனநிறைவை பெறுவேனே அப்பா! இனி யாரிடம் கூறுவேன்! நம்பிக்கையுள்ளது, நீங்கள் எவ்வுருவத்தில்லா வது என் வாழ்வில் கலந்து கொள்வீர்கள் என்று. நீங்கள் கற்றுத்தந்த வாழ்க்கை பாடத்தை தான் தினம்தோறும் என் புதல்வனுக்கு கற்பிப்பேன் அப்பா. மண்ணுலகை விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண் உலகுச் சென்ற உம்திருமுகம் என் இதயத்தில் நிறைந்திருக்கும்.

இறைவன் என்னிடம் சூழ்ச்சி செய்து உங்களை என்னிடமிருந்து பிரித்துவிட்டானே அப்பா! நீங்கள் இல்லாத இவ்வுலகத்திலே உங்கள் நினைவில் எவ்வாறு இனி வாழப்போகிறேன் அப்பா...

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

**உங்கள் பாசமகு**
**பரா (Baby)**

# என் அன்பு தெய்வத்திற்கு மூத்த புதல்வியின் அன்பு முத்தங்கள்

அப்பா பாசத் தேடலில் மகளின் கண்ணீர் வரிகள்.

"அப்பா" என்ற ஆலமர நிழலில் இருந்தவரை வாழ்க்கை என்னும் வெயில் என்னை சுட்டதே இல்லை. குறை என்ற சொல் தெரியாது எனக்கு உங்களுடன் இருந்தவரை நீங்கள் தந்த அன்பு, நல்வழிகாட்டல், நற் செயல்கள் அத்தனை நல்லவைகளும் என் இரத்தத்தில் கலந்து விட்டது. என் சிறுவயதில் நீங்கள் என்னை உங்கள் மார்பில் வைத்து தூக்கிய நாட்கள் சொல்லி தந்த கதைகள் அந்த நாட்கள் புனிதமானது, உங்கள் மார்பில் தான் தூங்கிய நாட்கள் நினைவில் வரும் போது உங்கள் அரவணைப்பை உணர்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பார்த்த முதல் கதாநாயகன் என் "அப்பா" உங்கள் முதல் பெண் குழந்தை என்று நீங்கள் எப்பொழுதும் என்னை ரசித்து கொஞ்சுவீர்கள். நான் பிறந்ததில் இருந்து திருமணம் ஆகிய பின்பு இன்று வரை எனக்கு என்ன தேவை என்று பார்த்த வண்ணம் இருந்தீங்கள் நீங்கள் கனடாவிற்கு வந்து குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடினீர்கள், கனடாவிற்கு நீங்கள் வந்து எங்களுடன் இருந்த அந்த இனிமையான நாட்கள் என்றும் நல்ல நினைவுகள் ஒவ்வொரு அசைவிலும் உங்கள் நினைவுகள் என் வாழ் நாளில் நிறைய விடயங்களில் உங்கள் குரல் உங்கள் ஆலோசனைகள் தான் எனக்கு மன நிறைவை கொடுத்தது.

என் மனம் ஏதேனும் கவலை கொண்டால் என் நேரம் ஆனாலும் இரவோ பகலோ எனக்கு Call எடு அப்பா எப்பவும் உனக்கு அறுதல் கூறுவதற்கு தயராக இருப்பேன் என்று கூறுவீர்கள் அந்த குரலை தேடுகின்றேன் அப்பா.

நீங்கள் என் பிள்ளைகளை பாசத்தோடு கூப்பிடும் சொல் "செல்லம்" அந்த குரல் இன்னும் காதில் ஒலிக்கிறது.

அப்பா நீங்கள் நின்மதியாக உறங்குகங்கள் என்றும் நாம் ஐவரும் நீங்கள் வழிகாட்டிய பாதையில் செல்வோம்.

அப்பா உங்கள் பாசக்குரலுக்காக ஏங்கும் உங்கள் அன்பு மகள்... இழந்தவை எல்லாம் திரும்ப கிடைக்கும் என்றால் நான் முதலில் கேட்பது என் அப்பாவை தான்.

அப்பா நீங்கள் எங்கள் தெய்வம் அப்பா....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**உங்கள் செல்ல மகள்**
**இந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆறுகடல் நீ தாண்டி அய்யா உன் மனம் வாடி**
**என்னை கரைசேர்க்க துடித்தாய் நீ.......**

உடலாலும் மனதாலும் நீ உடைத்த போதிலும்...
ஊக்கம் தந்து என்னை வழி நடத்தினாய் நீ....

தோள்மீதும், மார்பு மீதும் அன்னை சாய்த்து
என் வலிகளை எல்லாம் தாங்கி
வழிகாட்டும் கலங்கரை விளக்காய்,
என் பாதைகள் முழுக்க வெளிச்சம் தந்தாய் நீ....
வறுமை கோட்டில் நீ கிடந்தாலும்
என் பசியை போக்க மறந்ததில்லை அப்பா!..

பெற்றவள் என்னை பத்துமாதம் சுமந்து இருக்கலாம்..
ஆனால் ஆயுள் வரையிலும் என்னை சுமந்து கொண்டே
இருப்பவர் நீ.... மட்டும் தானே அப்பா!!!

தடம்மாறி போகும் போதெல்லாம் தடுத்து நிறுத்தி
சரியான பாதையை காட்டினாய் அப்பா நீ.....

பொறுமை இருந்தால் எதையும் சாதிக்கலாம்
பொறுமையே எதற்கும் பெருமை என்பதை
உணர்தினாய் எனக்கு அப்பா.....

ஒருவர் எம்மீது பொறாமை கொண்டாலும்
நாம் அவர்களை அன்போடும் பாசத்தோடும்
அரவணைக்க கற்றுக் கொடுத்தாய் அப்பா நீ...

என் பெயருக்குபின்னால் வரும் பட்டத்திற்கு
இரவு பகல் பாராமல் உடலை உருக்கி உள்ளம்
வருத்தி உழைத்தாய் அப்பா.....
நேர்மையான அழகெனை பின்பற்ற சொல்லி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையிலும் தவறு செய்யாதே என்று
கற்றுக்கொடுத்தாய் அப்பா நீ....

கடன் இல்லா வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை
எந்த கடன் இல்லாமலும் எந்தக் உயிர் பிரிய வேண்டும்
என்பதை சாதித்து காட்டினாய் அப்பா நீ....

உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கின்றேன் அப்பா....

**அன்பு மகன் பத்மசிவம்**

## கடைக்குட்டியின் கண்ணீர் காணிக்கை

"சீரளும் சோபகிருதாண்டு - சிறப்புநிறை
தைபதினாறு சிவனாகிய எம்பிரான்
எந்தை சிவநாதன் அடி பாதம் ஆசிவேண்டி
எழுத்தாணி இயம்பத் தொழுவேன்"

இன்று அப்பா என்று அழைத்தாலும் அதற்கு பதிலலிக்க யாரும் இல்லை என எண்ணும்போது எனது குரல் நடுங்குகிறது அப்பா..!

தன் மகன் தானுயர தந்தையின் தற்பெருமை தனை சொல்லியடக்க ஓயாது என்பது போல், என் பரத நாட்டியத்தை கண்குளிர பார்த்து விட்டு அம்மாவிடம் புகழ்வீர்களே அப்பா...!

சும்மா யாரும் சொல்லவில்லை, "தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பில் முன்னே" என்று அதே போல் என்னை கண்ணும் கருத்துமாக என் துன்பம் உன் துன்பம் போல் எடுத்து காப்பீரே அப்பா...

உங்கள் அறிவுரைகளில் ஒன்று "கஞ்சன் என்றும் பெயர் வாங்கலாம் ஆனால் ஒருபொழுதும் கடன் காரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெயர் வாங்கக் கூடாது" இதன் உதாரணமாக இருந்து எங்களுக்கு ஒரு எடுத்தக்காட்டு நீங்கள் அப்பா...!

இரவுகளில் பேய்க்கனவு கண்டு பாதியில் எழுந்து அழும்போது தோள்களில் இறுக்கமாய் மார்போடு அணைத்துக் கொண்டு என்னை ஆறுதல் படுத்துவீர்களே அப்பா...! உங்கள் மார்பில் தூங்க உங்கள் மேல் சூடு படும்போது அந்த சுகம் எந்த தாயின் தாலாட்டிலும் இருக்காது அப்பா....!

சமைத்த சாப்பாடு உப்புமணமே இன்றி இருந்தும் நாகூசாமல் சொல்லும் பொய் "அருமையான உன்சமையல்" என்று இனி யாரிடம் கேட்பேன் அப்பா...!

சித்திரை வருடப்பிறப்பிற்கு உங்களிடம் முதலில் கைவிசேடம் வாங்கும் பழக்கம் கொண்டிருப்பேனே அப்பா..!

நீங்கள் என்னை செல்லமாக "மகாராணி" என்பீர் களே அப்பா..! மறு ஜென்மம் ஒன்று என்றிறுந்தால் மீண்டும் உங்கள் மகளாக பிறக்க ஆசை கொள்கிறேன் அப்பா...!

அமிழ்தினும் அற்ற இனிதேனும் மக்கள் சிறுகை அளாவி கூழ்" இவ்வடிதனில், நம்முடைய மக்களின் சிறு கைகளால் அளாவப்பெற்ற கூழேயானாலும்., பெற்றோர்க்கு அமிழ்தத்தை விட மிக்க இனிமை உடையதாகும் என்பது போல் வயிறார கடைசிவரை என்கையால் சமைத்து என்கையால் சாப்பிட்ட உங்கள் மனம் அறிவேன் அப்பா..!

என் மனதில் நல்லெண்ணங்களை விதைத்து விட்டு இன்று அமைதியாக உறங்கிக்கொண்டு இருக்கின்றீர்கள்! உங்கள் ஆத்மா சாந்தி அடையட்டும் அப்பா குட்டி...!

**கடைக்குட்டி**

**டிலுக்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனத்த இதயத்துடன் உங்கள் மருமகள் இரங்கல்....

உங்களுடனான உறவு உங்கள் மகன் திருமணத்தி லிருந்து ஆரம்பமானது. அன்றிலிருந்து இன்று வரை நீங்கள் காட்டும் அன்பு அளப்பற்றது. நான் உங்களிட மிருந்து கற்றுகொண்ட விடயங்கள் எத்தனையோ மாமா. அதிலும் உங்களுடைய பெருமை, மற்றவர்களை மன்னிக்கும் தன்மை, நேர்மை என்பன தான் பார்த்து வியந்தவை. மாமிக்கு ஒரு நல்ல கணவர் ஆகவும் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல தகப்பனாகவும் மருமகள், மருமகன்களுக்கு மாமா எனும் போர்வையில் நல்ல அப்பனாகவும், பேரன் பேர்த்திகளுக்கு நல்ல தாத்தாவாக வும் வாழ்ந்து இன்று எங்களை விட்டு பிரிந்து எங்கு சென்றீர்களே?

இறுதி சந்திப்பில் உங்களை பார்த்த போது நீங்கள் எனக்கு கூறிய ஒவ்வொரு வார்த்தைக்குமான அர்த்தத் தினையும், அதன் தேவையினையும் இப்போது தான் எனக்கு புரிகிறது. அதனை நினைக்கும் போது எல்லாம் மனது கனக்கிறது. உங்களது கடமைகளை சரியாக செய்து முடித்து விட்டேன் எனவும், எல்லா பிள்ளைகளையும் தன் கால்களில் நிக்க வைத்து விட்டேன் எனவும் ஆணவ மாகவும் திமிாகவும் கூறினீர்களே? அது உண்மை தான். ஒவ்வொரு பிள்ளைகளின் உயர்வினை கண்களில் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்து மனம் நெகிழ்ந்த நீங்கள் ஏன் எங்களை விட்டு சென்றீர்கள் மனம் அதனை ஏற்க மறுக்கிறது மாமா! உங்களை நாங்கள் தேடுகிறோம்.


உங்களுடைய நினைவுகள் பசுமரத்தாணி போல எங்களது மனதில் பதிந்துள்ளது. உங்களைப் போல் ஒரு மனிதனை இழந்ததற்கு இப்பூமிதான் வருந்த வேண்டும். இனி நீங்கள் செல்லும் பாதை நல்லதாக அமைய இறைவனை வேண்டுகிறோம். நீங்கள் எங்களுக்கு இறைவனைப் போல் இருந்து வர இருக்கும் துன்பங்களை நீக்கி, எங்களுடனையே இருந்து எங்களை ஆசீர்வதிப்பீர் களாக!


என்றும் நீங்கா நினைவுகளுடன்,
உங்கள் மூத்த மருமகள்
**நிலானி சிவகுனாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dear grandpa!

I missed you so much and love you a lot. You played lots with me. I know you loved me. I remember your memories. I'm luky to have grandpa like you. How luky I was spending good time with you in December. I like you. I thought you are the star and always looking at us. You'll always be in our heart. Thank you for everything you did to us.

Thank you

your loving,
Grand son,
Alwyn. S
30.01.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dear Grandpa,**

When you first came to Canada, I wasn't sure what it was going to be like. Although, as time went on, you, me, Aksiwin and a lot of other people went to all kinds of different places together for you to experience what Canada looked like. You came to my 8th grade graduation and came to Aksiwin's math award ceremony. The minute that you came to our house, Aksiwin bonded with you. You and Aksiwin connected almost instantly. You played with him, he showed you things that he made, talked to you, and he was by your side. Aksiwin adored you being here in Canada with him. I really enjoyed helping you, making small gifts for you, and talking to you. When it was time for you to go back to Sri Lanka, Aksiwin was sad, he was going to miss your presence. Although you were back home, you made sure that you would occasionally talk on the phone with Aksiwin to see how he was doing. When I heard that you got sick, I felt heart broken. I thought that it would pass in a short amount of time, but it didn't. As time went on, your sickness slowly got worse. But of course, I still had high hopes, trying my best to not think of the worst case scenario. Then one night, it happened. My mom got a call saying that you passed away. My heart dropped, I wasn't sure how to react. Your body fought off the sickness for as long as it could, until it finally gave up after all these years. Everyone is very sad that you passed away, but I know that you are watching over us. We love you, and dearly miss you. Your grandchildren, Aksiwin and Jenze.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள மாமா

என்னை உங்கள் குடும்பத்தில் ஒருவராக பங்குனி மாதம் கணபதியின் அருளினால் தேர்ந்து எடுத்தீர்களே

வாழ்க்கையில் நல்ல விடயங்களை எனக்கு சொல்லி கொடுத்தீர்களே.....

அன்பாகவும் நகைச்சுவையாகவும் எப்பொழுதும் பேசுவீர்களே...

பழைய பாடல்களை இனிமையாகப் பாடி எம்மை எப்பொழதும் உற்சாகப்படுத்துவீர்களே

மனம் தளரும் போது எமக்கு அறிவுரைகளைக் கூறி எம்மை உற்சாகப்படுத்துவீர்களே.

நான் உங்கள் குடும்பத்துக்கு மருமகளாக வந்த நாள் முதல் ஒருபோதும் என்னை கோபமாகக் கூட பேசியதில்லையே மாமா.

ஒவ்வொருநாளும் தொலைபேசி உரையாடல்களின் போது உங்கள் பேரனைக் கொஞ்சுவதை மறக்கமாட்டீர்களே.

உங்களின் நினைவுகளுடன் கனத்த இதயத்துடன் எவ்வாறு! எமது வாழ்வினை கொண்டு செல்லப் போகின்றோமோ...

**பாசமிகு மருமகள் தர்சி**
**பேரன் தஸ்வின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்பான மாமனார்,

நான் இந்த வார்த்தைகளை எழுதும்போது, உணர்ச்சிகளின் வெள்ளம் என்னை மூழ்கடிக்கிறது, நீங்கள் இல்லாத கனம் என் இதயத்தில் அதிகமாக அமர்ந்திருக்கிறது. உங்கள் புறப்பாடு நிரப்ப முடியாத வெற்றிடத்தை விட்டுச்சென்றது, உங்கள் சிரிப்பின் எதிரொலிகளும் உங்கள் இருப்பின் அரவணைப்பும் எங்கள் வீட்டின் மூலைகளில் நீடிக்கின்றன.

உங்கள் குடும்பத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பாக்கியத்திற்கும், நாங்கள் பகிர்ந்து கொண்ட தருணங்களுக்கும், எங்கள் அனைவருக்கும் நீங்கள் தாராளமாக வழங்கிய அன்பு மற்றும் ஞானத்திற்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். உங்கள் கருணை, வலிமை மற்றும் அசைக்க முடியாத ஆதரவு ஆகியவை என் வாழ்க்கையில் ஒரு அழியாத முத்திரையை பதித்துள்ளன, வார்த்தைகளால் முழுமையாகப் பிடிக்க முடியாத வழிகளில் என்னை வடிவமைக்கின்றன.

நாங்கள் ஒன்றாக உருவாக்கிய நினைவுகள், உங்கள் வாழ்க்கைக் கதைகளை நீங்கள் பகிர்ந்து கொண்ட நேரம், வெற்றிகள் மற்றும் சவால்கள் இரண்டையும் நிரப்பியது அல்லது குடும்பக் கூட்டங்களின் போது நாங்கள் அனுபவித்த சிரிப்பு போன்ற பொக்கிஷங்கள். உங்கள் வழிகாட்டுதல், அடிக்கடி மென்மையான தொடுதலுடன் வழங்கப்படுகிறது, இது ஒரு வழிகாட்டும் ஒளியாகவும், உங்கள் அன்பு, கடினமான காலங்களில் வலிமையின் தூணாகவும் உள்ளது.

நீங்கள் கற்பித்த பாடங்கள், நீங்கள் நிலைநாட்டிய மதிப்புகள் மற்றும் நீங்கள் தாராளமாகக் கொடுத்த கருணை ஆகியவற்றில் உங்கள் மரபு வாழ்கிறது. நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் மரியாதையுடன் நடத்திய விதம், வாழ்க்கையின் துன்பங்களை நீங்கள் கருணையுடன் எதிர்கொண்ட விதம், எல்லாவற்றிற்கும் மேலாக குடும்பத்திற்கு முன்னுரிமை அளித்த விதம் - இவைதான் எங்களைத் தொடர்ந்து ஊக்கப்படுத்துகின்றன.

நீங்கள் உடல்ரீதியாக இப்போது இல்லை என்றாலும், நாங்கள் பகிர்ந்து கொள்ளும் கதைகள், நாங்கள் கடைப்பிடிக்கும் மரபுகள் மற்றும் ஒரு குடும்பமாக எங்களை இணைக்கும் அன்பு ஆகியவற்றில் உங்கள் ஆவி வாழ்கிறது. உங்கள் நினைவகம் எங்கள் வாழ்க்கையில் ஒரு ஒளி விளக்கு, எங்களுக்கு இருக்கும் தருணங்களை மதிக்கவும், எங்கள் அன்புக்குரியவர்களை நெருக்கமாக வைத்திருக்கவும் நினைவூட்டுகிறது.

என் வாழ்க்கையில் நீங்கள் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி நான் சிந்திக்கும்போது, நீங்கள் எனக்கு அளித்த அன்பு மற்றும் ஏற்றுக்கொள்ளுதலுக்காக ஆழ்ந்த நன்றி உணர்வை உணர்கிறேன். நீங்கள் எனக்குக் கற்பித்த பாடங்களையும் உங்கள் ஆவியின் அரவணைப்பையும் என்னுடன் எடுத்துச் செல்வேன், நீங்கள் விரும்பிய கொள்கைகளைப் பிரதிபலிக்கும் வாழ்க்கையை வாழ முயற்சிப்பேன்.

அன்புள்ள மாமியார், வலிமை, வழிகாட்டுதல் மற்றும் இரக்கத்தின் ஆதாரமாக இருப்பதற்கு நன்றி. நீங்கள் ஆழமாக இழக்கப்படுவீர்கள், ஆனால் உங்கள் மரபு நீங்கள் தொட்டவர்களின் இதயங்களில் நிலைத்திருக்கும்.

நன்றியுடன்,

ரொனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் உற்ற துணையாய் உற்ற துணையாய் பாசமிகுதந்தையான் அண்ணா என்றும் மாமா என்றும் உறவாட அன்பு மொழிபேசி வந்து நின்றாலும் அன்புள்ளம் கொண்ட உமக்கு நிகராகுமோ என் அன்பான அண்ணாவே.

நாங்கள் எப்போவந்தாலும் உடனே நீங்களும் மச்சாளும் பிள்ளைகளும் ஓடோடி வருவீர்களே இனி நாங்கள் யாரிடம் செல்வோம். எங்கள் இன்ப துன்பங்களில் முன்நின்று நடத்துவீர். கடைசியாக நாங்கள் உங்கு வந்து எங்களுடைய நாற்பத்தைந்தாவது திருமண நாளிற்கு நீங்கள் மச்சாள் பிள்ளைகளுடன் வந்து எங்களை ஆசீர் வதித்தீர்களே அன்று கோயில் வாசலில் வைத்த சுந்தரி எனக்கு நல்ல சந்தோஷமாக வரும் வருடம் தான் இருக்கிறேனோ தெரியாது என்றீர்கள் எங்களை தவிக்க விட்டு சென்றுவிட்டீர்களே.

நான் கனவில் கூட நினைக்கவில்லை நீங்கள் எங்களை விட்டு இறைவனடி சேர்வீர்கள் என்று அழுது புலம்புகின்றோம். தவிக்கிறோம் மீண்டும் உங்களை காண்போமோ என் பிள்ளைகள் "ரத்தி மாமா" என்று ஆசையோடு கூப்பிடுவார்களே, அவர்களுடன் கூடி ஆடிப்பாடி மகிழ்வீர்களே. இனி அவர்கள் ரத்தி மாமாவை தேடி எங்கு போவார்கள்.

வெகு விரைவில் ஓடோடி வந்து என் ரத்தி அண்ணாவை பார்க்கலாம் என்றிருந்தேன், எல்லாம் பொய்யாகி விட்டதே, கனவுகூட கண்டதில்லை கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே நடப்பவற்றை அனைவருக்கும் நல்வழிகாட்டி விட்டு நீங்கள் மட்டும் தனிவழி சென்றதேனோ... கலங்கித் தவிக்கிறோம். ரத்தி அண்ணை நீங்கள் மீண்டும் எங்களிடம் வருவீர்கள் என்ற நம்பிக்கையில் வாழ்வோம்.

ரத்தி அண்ணை உங்கள் அன்பான முகத்தை எங்கு காண்போம் மீண்டும் எங்களிடம் ஓடி வாருங்கள்....

மண்ணோடு உங்கள் பூதவுடல் மறைந்துவிட்டா லும் நித்தம் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கும் ஓம் சாந்தி சாந்தி .......

உங்கள் பிரிவால் கலங்கி தவிக்கும்
**சகோதரர்கள்**
**சுந்தரி, நித்தியா, வசந்தி,**
**மோகன், கௌதமன்**

# நெஞ்சம் நிறைந்த தம்பி சிவநாதன்

காலத்தின் சதிகளின் விளைவினைக் கண்டு கவலை கொள்ளாத மனம் கொண்ட உமை, காலனவன் தன் கணக்கை சாலவே செய்ய, மண் விட்டு விண் சென்றீரோ? பூத்த உன் கொடிகள் தவிக்குதய்யா விண்ணுலகம் சென்ற உமை நினைத்து கண்ணீர் விட்டு தவியாய்த் தவிக்கிற தய்யா, ஆற்றுவாருமில்லை தேற்றுவாருமில்லை ஆறுதல் சொல்ல சொற்களுமில்லை.

துன்புற்றோர் துயர் துடைத்து, ஆதரவற்றோருக்கு ஆதரவளித்து துணைக்கரம் நீட்டி அடைக்கலம் கொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமை ஆண்டவன் ஏன் அழைத்தான் அன்பும் பண்பும் பணிவும் கொண்டவராகவும், ஆன்மீகம் விவசாயம் போன்ற துறைகளில் அயராத ஆற்றல் கொண்டவராகவும் விளங்கினீர் இவற்றை எல்லாம் விட்டு விண்நோக்கிச் சென்றாலும் கண்விட்டு மறையாமல் என்றுமிருப்பீர். என் உள்ளத்தில், உமது இன்முகம் எந்நாளும் உயிர் வாழும் உள்ளத்தில் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

கண்ணீர் துளிகளுடன்
அண்ணன்
**த. அருமைநாயகம்**

# அண்ணாவே! நீ சென்றாயோ!

அண்ணாவே அண்ணாவே!
எனதருமை அண்ணாவே!
முந்திப் பிறந்ததனால் நீ எனக்கு
முந்தியே இறந்ததாயே!
பெற்றோரின் அரவணைப்பில்
பிள்ளைகளாய் வாழ்ந்தோமே!
குடும்பமாய் மகிழ்ந்திருந்து
கூடிக் குலாவியிருந்தோம் அன்று
கடைசியில் இருப்பதனால்
கடைசி நேரம் உன்னைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக் கிடைக்கவில்லை
இந்தப் பிறப்பில் சகோதரனாய்
பிறந்தமை போல்
இன்னும் பிறப்பு இருப்பின்
அப்படியே பிறந்திடுவோம்
பிறப்புண்டேல் இறப்புண்டு
இறப்புண்டேல் பிறப்புண்டு
இதுவே உலக நியதியாம்
அண்ணா இறந்தாலும் அவரது ஆன்மா
பொன்னார் திருவடி போய்ச்சேரவும்
அண்ணியும் பிள்ளைகளும்
இயற்கையை எண்ணி
இறவனை வேண்டி
அமைதியடையவும்
நானும் என் குடும்பத்தினரும்
இறைவனை வேண்டிப்
பிரார்த்திக்கிறோம்.

தம்பி

**சிறிதரனும் குடும்பத்தினரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ பூமியிலே அவதரித்த
சிவ நாதன் ஐயாவே!
நன்மைகள் பல செய்து
ஞாலத்தில் வாழ்ந்தீரே!

முன்பள்ளி சபையிலே
முத்துப் போல அமர்ந்திருப்பீரே
சிறுவர்களுக்கு விழா என்றால்
குதுகலம் நீர் அடைவீர்

நாம் உமை அழைக்க மறந்தாலும்
அன்போடு வந்திடுவீர்
எம் எதிர்கால சிற்பிகளிற்கு
அறிவுரைகள் வழங்கிடுவீர்

வெளிநாடு சென்று வந்தால்
வெறுங்கையுடன் வரமாட்டீர்
பள்ளிச் சிறுவர்களுக்கு
பரிசுடனே வந்திடுவீர்.

அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதில்லை என்றறிந்தும்
உங்கள் பாசமுகம் காண்பதற்கு
பரிதவித்து நிற்கின்றோம்.

**முன்பள்ளிச் சமூகம்**
**சுடர் ஒளி வாசிகசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையில்லா வாழ்க்கை

வாழ்க்கை நிலையற்றது. ஆனால் உலகில் வாழும் மாகதா வாழ்க்கை நிலையற்றது என்பதனை உண்பதில் அவ்கள் அதனை உணர்ந்து கொண்டால் பொட்டியும் பொருமையும் எழவாயப் பில்லை ஆகும் படித்தவர்கள் கூட் இதனை உணர்வதில்லை.

சைவசமயத்தின் கைக்கொண்ட சமயகுருமார்கள் கூட மரணம் என்ற பிடியில் இருந்து தப்பவில்லை. அனைவரும் ஒரு நாள் இவ்வுலக வாழ்வை விட்டு விடைபெற்றெ ஆகவேண்டும்.

ஆன்மா அழிவற்றது உடல்விட்டுப் பிரியும் ஆன்மா ின் ஒரு உடலுக்குள் புகுந்து கொள்கிறது. பிறந்தவனுக்கு மரணம் நிச்சம் இதனை யாரும் மீற முடியாது,

வாழும் போது பிறகுக்கு உதவி வாழ்வதே மோலானது உதவி செய்யாவிடினும் தீங்க செய்யாதிருப்பதேதே சிறந்தது. தங்கள் பெயருக்கும் புகழுக்கும் வேண்டி தீயவை புரிவர் சமுதாயமட்டத்தில் கீழ் நிலையடைவது நித்சனம்.

கர்மபலன்கள் எவரும் மீற முடியாது ஆனால் தீயவைபுரிந்து விட்டு அதற்கு சமாதானம் கூறுபவர்கள் கீழ் நிலையிலேயே கணிக்கப்படுவார்கள்.

மரணத்தை எவரும் வெல்ல முடியது ஒவ்வொரு வரும் பிற்கும் போதே முடிவும் நிச்சயிக்கப்படுகிறது.

மனைவி, மக்கள், சுற்றம் என்பன இடையில் வந்த சொந்தங்கள். இவை எம்முடன் கூட வருவதில்லை. ஒருவர் மறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால் அவரது தொடர்புகள் உதவிகள் இழக்கப்படுவதினாலேயே நாம் வருந்துகின்றோம்.

வாழ்போது நல்லன செய்ய வேண்டும் மறைந்தாலும் அது மறக்கப்படாது நினைவுகூரப்படும்.

மூன்று ஆனபிள்ளைகள் இரண்டு பெண்மக்களை பெற்ற திரு. ப.சிவநாதன் அண்மையில் உலக வாழ்க்கையினின்றும் விடை பெற்றுக் கொண்டார்.

உப புகையிரத நிலைய அதிபராக இருந்து தனது சீரிய பணிமூலம் புகையிரத நிலைய அதிபராக உயர்ந்து மக்களின் நன்மதிப்பையும் புகையிரதத்திணைக்களத்திலும் குறைபடாதவன்.

மறைந்த திரு. ப.சிவநாதன் இறைவனடி நிழலில் சாந்தி பெற பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி


"பிறின்ஸ் ரோட்" தொடர்மாடி
109/1 – 4/2 கல்லூரி வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு – 13
0112384744

**எல். சிவஞானசுந்தரம்**
புகையிரத நிலைய அதிபர்
(ஓய்வுநிலை)
அகில இலங்கை சமாதான நீதிபதி
சத்தியபிரமான மொழிபெயர்ப்பாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாட்டு அலகு முறை / சர்வதேச அலகுமுறை

Kilogram (kg) - திணிவு
Meter (m) - நீளம்
Second (s) - நேரம்
Ampere (A) - மின்னோட்டம்
Kelvin (K) - வெப்பம்
Mole (mol) - மூலக்கூறு
Candela (cd) - வெளிச்சம்

சர்வதேச அலகு முறை / பன்னாட்டு அலகு முறைமை (International system of units) (SI) ***1960ம்*** ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இவை ஏழு *(7)* அறியப்பட்ட அலகுகளை கொண்டது.

## முன்னுருபு சர்வதேச அலகுமுறை (SI prefixes)

| Name (Symbol) | Scientific Notation |
|---|---|
| Quetta (Qs) | $10^{30}$ |
| Ronna (R) | $10^{27}$ |
| Yotta (Y) | $10^{24}$ |
| Zetta (Z) | $10^{11}$ |
| Exa (E) | $10^{18}$ |
| Peta (P) | $10^{15}$ |
| Tera (T) | $10^{12}$ |
| Mega (M) | $10^{6}$ |
| Kilo (K) | $10^{3}$ |
| hecto (h) | $10^{2}$ |
| deca (da) | $10^{1}$ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த

# சகல கலாவல்லி மாலை



**காப்பு**

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே! - 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே! - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே! - 03

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே! - 04

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே! - 05

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே! - 07

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்
நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே!
சகல கலாவல்லியே.! - 08

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே! - 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
ண்கண்ட அளவிற் பணியச்செய்வாய்!
படைப்போன் முதலாம்
ண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும்
விளம்பில் உன்போற்
ன்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே! - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

16ம் நாள் தைமாதம் 2024ம் ஆண்டு செவ்வாய்க்கிழமை
எங்கள் அனைவரையும் ஆறாயத் துயரில் ஆழ்த்தி எம்மை
விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த எம் குடும்பத்தலைவர்
அமரர். பரராஜசேகரம் சிவநாதன் அவர்களின் பிரிவால் வாடிய
எமக்கு தேடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும்.
தொலைபேசி மற்றும் பற்பல ஊடகங்கள் வாயிலாக அனுதாபம்
தெரிவித்தவர்களுக்கும் அத்துடன் 19-01-2024 இல்
அன்னாரது வீட்டில் நடைபெற்ற தீமை கிரியைகளில் பங்கு
பெற்றவர்களுக்கும், இம்மலரை உரிய நேரத்தில் அச்சிட்டுத்
தந்த அச்சகத்தர்களுக்கும் வேறு பல வழிகளில்
உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த
நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.


நன்றி

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச வழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ
அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ அது இங்கேயே
கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொருநாள் அது
வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்.





தீபம் பிறிண்டேர்ஸ்,
717,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 0772506234

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org